செ.வெ.எண்: 90 நாள்:31.01.2017

**பத்திரிக்கைச் செய்தி**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சத்துணவுஅமைப்பாளாகள் தேர்வு.**
**பெண்கள் மட்டுமே 15.02.2017வரை விண்ணப்பிக்கலாம்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் செயல்பட்டு வரும் பள்ளிச் சத்துணவு மையங்களில் 160 அமைப்பாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. இந்தப் பணியிடங்கள் நேர்முகத் தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளது.

**கல்வித் தகுதி:**

பொதுபிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பிரிவினர் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் 8ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவராக இருத்தல் வேண்டும்.

**அமைப்பாளர் காலிப்பணியிடங்கள் இனசுழற்சி முறையில் பூர்த்தி செய்யப்படும்.**

பணி நியமனம் வேண்டி விண்ணப்பிக்க உரிய படிவத்தை ஊராட்சி ஒன்றியம், நகராட்சி அலுவலகங்களில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1. பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
2. காலிப்பணியிடம் மற்றும் இனசுழற்சி விவரங்கள் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய/ நகராட்சி அலுவலகங்களில் உள்ள அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டு விளம்பரம் செய்யப்படும்.
3. விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ் இணைத்திருக்க வேண்டும்.
4. அமைப்பாளர் பணி நியமனம் வேண்டி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகங்களில் **15.02.2017**ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.
5. பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இனசுழற்சி முறையில் தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

**வயது வரம்பு:**

அமைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் 01.01.2017 அன்று 21 வயது பூர்த்தியடைந்து 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். பழங்குடியினர் 18 வயது பூர்த்தியடைந்து 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்கள் 20 வயது பூர்த்தியடைந்து 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3கிமீ.க்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் கல்விச் சான்றும், இருப்பிடத்திற்கு அத்தாட்சியான குடும்ப அட்டை நகல், அல்லது வாக்காளர் அடையாள அட்டை நகல், வயது சரிபார்க்க அத்தாட்சி நகல் மற்றும் பிற ஆவணங்கள் இருப்பின் நகல் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்க வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**